**அம்பகமுவ பிரதேச சபை -2022**

---------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பகமுவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 188,601 ஆன பொது களஞ்சிய இருப்பு மீதி கணக்கீடு செய்யப்படாத இருந்ததுடன் வேல் இயந்திரம் ஒன்றின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 60,000 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாதாக | நிதிக்கூற்றுகளில் சரியான சரியாக கணக்கு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 65,950 ஆன தாமதக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய 5152 பற்று சீட்டின் மூலம் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 15,000 தொகை ரூபா 150,000 என கணக்கீடு செய்யப்பட்டமையால் வைப்புக் கணக்கில் ரூபா 135000 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | 2023 நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை கணக்கீடு செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) முன்னைய ஆண்டுக்காக பெற வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,634,643 ஆன மிகை மதிப்பீடு திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டு அகற்றப்பட்டு இருக்கவில்லை. | 2023 நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை கணக்கீடு செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் பெற வேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 28,309,671 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை கணக்கீடு செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 160,839 ஆன விளம்பர கட்டண வருமானம் மீளாய் வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய் வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 78,739 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய் வாண்டிற்குரிய பெற வேண்டிய ரூபா 344,100 ஆன விளம்பர பதாகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டி ருக்கவில்லை | 2023 நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை கணக்கீடு செய்வதாக | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | பொது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய பொது வைப்புக்களின் கீழ் 25 செயற் திட்டங்களுக்குரிய ரூபா 4,176,046 ஆன நிறுத்தி தொகை நிர்மாண கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | நிர்மாண நிறுத்தி வைத்தல் தொகை வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2. அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 146,031,044 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் ரூபா 567,957,750 கூட்டுத்தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக சபை அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் உட்பட பல உத்தியோகத்தர்களை உள்ளடக்கப்படும் வகையில் மதிப்பீட்டு குழு நியமிக்கப்படுவதற்குரிய சபை தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்காலிக மதிப்பீட்டைப் பெற்று கொள்வதற்கு இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | முறையான மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 884,369 ஆன ஆயுர்வேத மற்றும் பொது வழங்கல் இருப்புகள் இருப்பு பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் அத்தவறை சீராக்கி விநியோக் பெறுமதியை விடயப் பொறுப்பு உத்தியோகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்குகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக | இருப்பு பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 4 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | மீளாய்வாண்டிற்காக 12 வியாபாரங்களுக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 1946 இன் 30 ஆம் இலக்க வீத வரி மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் 20 ஆம் பிரிவு | | | |
| 140(1) ஆம் பிரிவு | 13 ஆண்டுகளாக வீத வரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | மாற்று நடைமுறை ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி தொடர்பாக உதவி ஆணையாளர் ஆணையாளருடன் கலந்துரையாடி எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | . |
| நி.பி 571(3) | 2014 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் காலாவதியான ரூபா 320,120 ஆன 10 வைப்புக்கள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை | பொது வைப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப் பட்ட நபர்களுக்கு கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | தீர்வு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.7.2 வரி தேவைப்பாடுகளுக்கு உடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசத்தை கட்டி எழுப்பும் வரி (NBT) ரூபா 935,678 தொகை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் கணக்குளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,894,414 ஆக இருந்ததுடன், அதற்கு அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,540,126 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன..

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,830,000 | 3,904,609 | 3,912,126 | 1,843,006 | 7,554,000 | 3,051,629 | 3,284,596 | 1,850,522 |
| (ii) | வாடகை | 12,604,000 | 3,519,726 | 3,619,364 | 2,110,227 | 17,550,000 | 3,589,308 | 5,400,576 | 2,209,866 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,751,000 | 1,807,338 | 1,807,339 | 182,420 | 2,251,000 | 1,817,803 | 2,111,611 | 182,421 |
| (iv) | ஏனைய வருமானம் | 105,815,221 | 24,000,000 | 19,325,222 | 51,427,930 | 44,485,000 | 48,185,000 | 35,760,339 | 46,753,153 |
| | | 126,000,221 | 33,231,673 | 28,664,051 | 55,563,583 | 71,840,000 | 56,643,740 | 46,557,122 | 50,995,962 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்**<br>--------------------------------<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில உள்ளவாறு ரூபா 1,125,468 ஆன நிலுவை வீதவரி மீதியொன்ற காணப்பட்டதுடன் அதில் 186 வீதவரி ஆதனங்களில் இருந்து 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 341,219 தொகையும் 82 வீதவரி வளவுகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 503,402 ஆக இருந்தது. | மீண்டும் வீதவரி எல்லைகளை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் அந்த ஆதனங்களுக்கு பட்டியலிடுதலை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் காணப்படும் நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வாடகை<br>------------ | | |
| i | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 964,292 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட நிலுவை கடை உரிமையாளர்கள் 13 பேரிடமிருந்து ரூபா 580,595 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | தற்போது ரூபா 101,672 தொகை அறவிடப்பட்டுள்ளதால் நிலுவையை நிலுவையை அறவீடு செய்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கேள்வி வாடகை ரூபா 1,188,102 ஆக இருந்ததுடன் அதில் 02 ஆண்டு முதல் 13 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 1,066,644 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | தற்போது ரூபா 101,672 தொகை அறவிடப்பட்டுள்ளதால் நிலுவையை அறவீடு செய்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம்<br>------------------------------ | | |
| i | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 551,383 ஆன நிலுவை நீர் கட்டண மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 01 மாதம் முதல் 60 மாதங்கள் வரையான காலப்பகுதிக்குரிய 55 பாவனையாளர்களிடமிருந்து ரூபா 163,551 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை கட்டணங்களை அளவிடுவதற்காக முன்னுரிமை வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| ii | அதிகார பிரதேசத்தில் விளம்பர பதவி தொடர்பான செய்யப்பட்ட தெரிவு பரிசோதனை போது 501.4 சதுர மீற்றருக்கு உரிய ரூபா 126,417 ஆன விளம்பரக் கட்டணங்கள் அறுவிடப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் முன்முறையப்பட்டுள்ள பிரகாரம் வருமான சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்<br>-------------------------------------------------------- | | |
| | தெரிவு பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 31 நிறுவனங்களிடமிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், வியாபார வரி மற்றும் நிர்மாண வரி ரூபா 31,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது குறித்த அறவீடுகளை மேற்கொள்வதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>------------------------------------------------- | | |
| | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் | 2022 ஆண்டிற்காக நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 696,815 தொகையும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 5,720,270 தொகையும் | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

பணம் ரூபா 3,957,007 மற்றும் கிடைத்துள்ளன. முத்திரைக் கட்டணங்கள் ரூபா 47,470,923 ஆக இருந்தது. .

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார பிரதேசத்திற்குரிய வீதிகள் வர்த்தமானியில் வெளியிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். | வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஆ) | சுற்றுலா அமைச்சினால் அபேட்டன் நீர்வீழ்ச்சி அருகே பார்வையாளர் கூடம் ஒன்றையும் படிகளை அமைத்து சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அழகிய மற்றும் கலாச்சார பெறுமதியுள்ள இந்த இடத்தில் சுற்றுலா பயணிகளின் வசதி கருதி மலசல கூட முறைமை யொன்றை நிர்மாணித்தல் உப உறுப்புரைகளை விதித்து டிக்கெட்களை வழங்கியோ அல்லது கேள்வி நடைமுறை மூலம் சீட்டுகளை விற்பனை செய்வதன் மூலமோ சபைக்கு வருமானம் ஒன்றை உழைப்பதற்கும் படகு சேவையொன்றை முறைமைப் படுத்துவதன் மூலம் சுற்றுலா பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | சொத்துக்களை முறையாக பராமரித்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட 1995 முதல் 2021 வகையான காலப்பகுதிக்குரிய 1,757,888 ஆன 09 முற்பணக் கணக்கு மீதிகள் மற்றும் 2013 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 102,750 | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆன முற்கொடுப்பனவு வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் முன்னைய ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 47,823,809 ஆன 110 கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கினை தயாரிக்கும் போது சீராக்குவதாக | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சபையின் பெக்கோ இயந்திரம் 2022 மார்ச் 19 ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி வரை ரிக்காடன் கழிவு தொகுதியில் டீசல் இல்லமல் நிறுத்தி வைத்திருப்பதாக ஓட்டக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கழிவு நிலையத்தில் பதிவேட்டின் பிரகாரம் வண்டி 2022 மார்ச் 14 ஆம் திகதி அதிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டு 2022 ஏப்ரல் 29 ஆம் திகதி வரை 45 நாட்கள் பெக்கோ இயந்திரம் முறையற்ற பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | மார்ச் 18 ஆம் திகதி மற்றும் 19 ஆம் திகதிகளில் JCB இயந்திரம் கழிவு பொருள் தொகுதியில் சேவை புரிந்துள்ளதாகவும் மார்ச் 19 ஆம் திகதியின் பின்னர் ஏப்ரல் 29 ஆம் திகதி வரை இயந்திரம் செயற்படுத்தப்பட்டிருக் கவில்லை என்பதாகவும் | முறையான அங்கீகாரத்துடன் இயந்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும் |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அம்பகமுவ பிரதேச சபையின் பயன்பாட்டுக்காக 35 காணி பகுதிகளின் உரித்து கையேற்கப்படாத இருந்ததுடன் வட்டவலைப் பொது காணி அத்துமீறி வெளித்தரப்பினரின் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது | கையேற்பதற்காக நடவடிக்கைகள் நிறை வேற்றப்பட்டுள்ளதுடன் அத்துமீறிய நுழைவாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியவுடன் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். |
| (ஆ) நூலகங்கள், வீட்டு கட்டிடங்கள் மற்றும் ஆயுர்வேத கட்டிடங்கள் உள்ளடக்கப்பட்ட 06 கட்டிடங்கள் திருத்தியமைத்தல் அல்லது பராமரிப்பின்றி இருந்ததால் சிதைவடைந்து காணப்பட்டது. | 2023 இன் நிலையான சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் திருத்தத்தின் கீழ் இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | சபை ஆதனங்களை திருத்தம் செய்து பராமரிக்க வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குணகந்தகம பாலத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 485,000 செலவிடப்பட்டு இருந்தது. இது தொடர்பாக 2023 பெப்ரவரி 03 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பாலத்தின் இரண்டு சுவர்களில் ஒரு சுவர் நடு பகுதியில் இருந்து முழுமையாக வெடித்திருந்தமையால் பாலத்தை பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. | அதிக மழை காரணமாக இப் பிரதேசத்திற்கு தாக்கம் செலுத்திய அவசர அனர்த்த நிலைமையின் கீழ் இடம் பெற்ற பௌதீக மாற்றங்கள் காரணமாக இந்நிர்மாணத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக | இடப்பரிசோதனை யின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவியணியில் 15 பதவிகளில் 26 வெற்றிடங்களும் அபிவிருத்தி உதவியாளர் பதவியில் 02 மிகைகளும் காணப்பட்டடதுடன் 25/2014 சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்படாத ஆரோக்கிய தொழிலாளர் பதவியில் 05 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மூன்று வருமான பரிசோதகர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. இதன் காரணமாக சபைக்கு வருமானம் சேகரிக்கும் செயற்பாட்டை செயற்திறனாக மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | வெற்றிடங்கள் தொடர்பாக அறிவித்திருந்த போதும் இதுவரை உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை | வெற்றிடங்களின் நிரப்புவபதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,475,000 ஆன 04 வாகனங்கள், 02 உழவு இயந்திர டேலர்கள் மற்றும் பிரதான செயலகத்துக்குரிய கார் வண்டி ஒன்றும் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து பாவனைக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | ஒரு வண்டியை திருத்துவதற்காக பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் உழவு இயந்திரத்தையும் நீர் பௌசரையும் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்வதற்கோ கை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 07 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தப்பட்டு வருவதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 53 சதவீதம் வரையிலும் 08 செலவின விடயங்களில் 03 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் பாதீட்டு நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை திட்டவட்டமாக இனங் கண்டு கவனமாக பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கைகளை எடுப்பதாக | இலக்குகளை தாபிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |